செ.வெ.எண்:58/ஜுன்/2020 நாள்:20.06.2020

# தொழில் குழுமங்கள் மற்றும் சங்கங்களுக்கு அழைப்பு

தொழில் குழுமங்களை உருவாக்கி, குழுமத்தில் உள்ள நிறுவனங்களுக்கு திறன் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. மாவட்ட திறன் பயிற்சி அலுவலக உதவி இயக்குநர் ஜி.இஸ்மத் பானு அறிக்கை:

தொழில் நிறுவனங்களை பலப்படுத்தும் வகையில் மத்திய தொழில் முனைவோர் திறன் மேம்பாடு சார்பில், ஸ்ட்ரைவ் என்கிற புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. சிறு, குறு நடுத்தர தொழில் நிறுவனங்களை மேம்படுத்துவதுதான் திட்டத்தின் நோக்கம், இந்த திட்டத்தில் தொழில் குழுமங்களை உருவாக்கி, குழுமத்தில் உள்ள நிறுவனங்களுக்கு திறன் பயிற்சி அளிக்கப்பட உள்ளது, ஒரு தொழில் குழுமம் பயிற்சிக்காக அதிகபட்சம் ஒரு கோடி ரூபாய் வரை செலவிட முடியும். தகுதி வாய்ந்த, ஆர்வமுள்ள தொழில் குழுமத்தினர் விண்ணப்பிக்கலாம்.

மாநில தொழில்நுட்ப கல்வி, மாநில இயக்குனரகம் ஆகியவற்றின் இணையதளத்தில் இருந்து விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்யலாம். பூர்த்தி செய்ய விண்ணப்பத்தை striveclusters@gmail.com என்ற முகவரிக்கு இமெயில் அனுப்பலாம். விண்ணப்பங்களை வரும், ஜுலை 30 க்குள் அனுப்ப வேண்டும். ஆவணங்களை மதிப்பீட்டு குழு சரிபார்த்து இறுதி செய்யும், விவரங்களை http://dgt.gov என்ற இணையதளத்தில் வீடியோ மூலம் அறியலாம். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மேலும் தொடர்புக்கு:
உதவி இயக்குநர்: திருமதி.ஜி.இஸ்மத் பானு,
செல்: 9688693974

**வெளியீடு :**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**